## றொறன்ரோ காவல்துறை சேவைக்கு ஓர் வழிகாட்டி

வணக்கம், நான் காவல்துறை அதிகாரி வில்லியம் பிளயர்.

றொறன்ரோ காவல்துறைச் சேவையில் நாங்கள் உலகிலேயே அதிகம் பல்லினமக்கள் வாழும் நகரத்திற்குச் சேவை ஆற்றுகிறோம் என்பதை அறிவோம். நீங்கள் எந்த நாட்டிலிருந்து வந்திருந்தாலும், எந்த மொழியை பேசுபவர் என்றாலும், எங்கள் உத்தியோகத்தர்கள் உங்களுக்கு உதவவே உள்ளார்கள்.

நீங்கள் உங்கள் அன்றாட வாழ்க்கையின் போது காவல்துறை உத்தியோகத்தர்கள் உங்கள் அக்கம்பக்கத் தெருக்களை கண்காணிப்பதைக் காண்பீர்கள்.

அவர்கள் நடந்தோ, காரிலோ, பைசிக்கிளிலோ வருவார்கள். அவர்கள் அனைவருமே உங்களுக்கு உதவத்தான் காத்திருக்கிறார்கள்.

நீங்கள், உங்களைப்பற்றி, உங்கள் சமூகம் பற்றி, உங்களுக்குள்ள பாதுகாப்பு அக்கறை பற்றி இந்த உத்தியோகத்தர்களுடன் உரையாடுவதை வரவேற்கிறேன்.

காவல் துறை உத்தியோகத்தர் பற்றியும், அவர்களோடு தொடர்புகொள்ளும் போது என்ன உதவிகளை எதிர்பார்க்கலாம் என்பதை அறிவதற்கும் இந்த காணொளி உதவும்.

காவல்துறையின் உதவி தேவைப்பட்டால் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம் என்பதோடு அவ்வேளைகளில் உங்களுக்குள்ள உரிமைகள், பொறுப்புகள் என்ன என்பதையும் இது தெரிவிக்கும். றொறன்ரோ காவல் துறை சேவையானது எமது பல்லின சமூகத்தைப் பெருமையுடன் பிரதிபலிக்கிறது. எங்கள் சமூகங்களுடன் இணைந்து, காவற்சேவையை வழங்கி றொறன்ரோவை சிறந்த, பாதுகாப்பான இடமாக்க நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம்.

இந்தக் காணொளிப்படம், றொறன்ரோ காவல் சேவையால் வழங்கப்படும் சேவைகளைப் பற்றிய தகவல்களோடு..

எவ்வாறு அவர்களிடம் தேவைப்படும் போது உதவியைப் பெறலாம் என்பதையும் சொல்கிறது.

இது சமூகத்தை சேர்ந்தவர்களினதும், பொலிஸ் காவலரதும் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றிய தகவல்களையும் தரும்.

அத்தோடு பொலிஸ் காவலர்கள் ஏன் பொதுமக்களை நிறுத்துவார்கள் என்பது பற்றிய சிலதகவல்களும்,
அப்படி அவர்கள் நிறுத்தினால் எதை எதிர்பார்கலாம் என்பதைப்பற்றியும் இது விளக்கும்

**பொலிஸ் காவலரைத் தொடர்பு கொள்ளல்**

றொரன்ரோ காவல்துறையின் அவசரகாலத் தொலைபேசி எண் 9 -1 -1

அவசரமற்ற தேவைகளுக்கு தொலைபேசி எண் - 416- 808 - 2222

தீப்பிடித்தல், குற்றம் நிகழுதல், உடனடி மருத்துவ தேவை, வாகனவிபத்து போன்ற அவசரத்தேவைகளுக்கு மட்டுமே 9 -1 -1.

நிகழ்ந்த களவு, கடவுச்சீட்டு தொலைதல், ஏமாற்று போன்ற அவசரமற்ற தேவைகளுக்கு 416-808-2222

எந்த மொழியிலும் அவசரதேவைக்கு 9-1-1 எண்ணை அழைத்தால், அழைப்புக்கு பதிலளிப்பவர் " அவசர எண்ணுக்கு அழைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு காவல் சேவையா, தீயணைப்புச்சேவையா அல்லது முதலுதவி வண்டியா தேவை என்று கேட்பார்.

உங்களால் ஆங்கிலத்தில் பேசமுடியாதென்றால்

911 அழைப்புக்கு பதிலளிப்பவர் எந்த மொழியில் சேவை தேவை என்று அறிவதற்காக கேள்வி கேட்பார்.

ஏதேனும் காரணத்தால் உங்களால் பேச முடியாவிட்டாலோ, எந்தமொழியில் பேச முயல்கிறீர்கள் என்று அறியமுடியாவிட்டாலோ அழைப்பை பெற்றவர் அழைப்பு வந்த தொலைபேசி எண் பதியப்பட்ட முகவரிக்கு உதவி அனுப்புவதற்கான ஒழுங்கைச் செய்வார்.

செல்பேசியிலிருந்து அழைத்தால் உதவி எங்கு தேவை என்று விளக்கமாக சொல்லத் தயாராக இருக்கவேண்டும்.

அழைப்புக்கு பதிலளிப்பவரால், நீங்கள் பேசும் மொழியை அறியமுடிந்தால் உங்களை அந்த மொழிச்சேவையுடன் இணைப்பார்..

உங்கள் மொழியைப்பேசும் ஒரு மொழிபெயர்ப்பாளர், 9-1-1 அழைப்புக்கு பதிலளிப்பவருக்கு உங்கள் அவசரத்தேவை என்ன என்பதை விளக்குவார். உங்கள் தேவைக்கேற்ற உதவி உங்களிடம் வந்து சேரும்..

## பொலிஸ் காவலர் எனது வீட்டிற்க வரும்போது என்ன செய்வது?

ஒரு தனிநபரின் வீடு பவித்திரமானது. அதை கனேடிய நீதிமன்றம் கூட ஏற்றுக்கொள்கிறது.. 9-1-1 அழைப்பு போன்று அவசரநேரங்களில் நீங்கள் அழைத்தால் பொலிஸ்காவலர் அதற்குள் நுழையலாம். சட்டபூர்வமான தேடல் அனுமதி போன்ற. ஆவணத்துடன் உள்ளே வரலாம்.

காவலர் கதவடிக்கு வந்தால், அவர்கள் அழைப்புக்கு மதிப்பளித்து பதில் அளியுங்கள். அவர்கள் பொதுமக்களின் பாதுகாப்புக்கே முன்னுரிமை தருவார்கள்.

பலசமயங்களில் காவல் அதிகாரிக்கு உங்கள் பண்பாட்டின் வெவ்வேறு பாரம்பரியங்கள் புரியாமலோ, தெரியாமலோ இருக்கலாம்.

உங்களுக்கு முக்கியமானவற்றை காவல் அதிகாரிக்கு தெரியப்படுத்துங்கள். உதாரணமாக வழிபாட்டுக்கென ஒதுக்கிய இடம் போன்றவற்றை குறிப்பிடுங்கள். கேள்விகள் கேட்பதற்கோ, அவருக்கு புரியாத விடயங்களைப்பற்றி சொல்வதற்கோ தயங்காதீர்கள். காவல் அதிகாரி உங்களுக்கு உதவிபுரியத்தான் வந்திருக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

## ஆங்கிலம் கதைக்கவோ, புரியவோ முடியாவிட்டால் என்ன செய்வது?

ரொரன்ரோ நகரம் உலகத்திலேயே அதிகமான பண்பாடுகளைக்கொண்ட மக்கள் வாழும் நகரம். இந்த சமூகங்களில் அனேகருக்கு ஆங்கிலம் இரண்டாவது மொழி.

உங்களால். ஆங்கிலம் பேசமுடியாவிட்டால் உங்கள் குடும்ப அங்கத்தினரையோ, நண்பரையோ சட்டபூர்வமான விஷயங்களில் உதவிக்கு அழையுங்கள். இதுவும் சாத்தியமில்லையென்றால், உங்களுக்கு உதவிபுரிய ரொரன்ரோ காவல்துறையினர் பலமொழிதெரிந்தவர்களை வேலையில் அமர்த்தியுள்ளார்கள்.

முழுமையாக விளங்கிக்கொள்ளாது, சட்டரீதியான ஆவணங்கள் எதிலும் கையெப்பம் இட சம்மதிக்கவேண்டாம்.

## ஒரு பொலிஸ் காவலர் பாதையில் என்னை அணுகினால் என்ன செய்வது?

காவலர் மூன்று பொதுவான காரணங்களின் அடிப்படையில் உங்களை நிறுத்தலாம் :

நீங்கள் தவறு செய்தீர்கள் என்று சந்தேகப்பட்டால்.

காவலர் நீங்கள் தவறு இழைப்பதை நேரடியாகக் கண்டிருந்தால்.

நீங்கள் வாகனம் ஓட்டும்போது

பொலிஸ் காவலர் தவறைத் தடுத்தல், விசாரித்தல் மற்றும் அமைதியைக் காத்தல் என்று உறுதி எடுத்துள்ளனர். அதனால் காவல் அதிகாரி உங்களுக்குத் தெரியாத காரணங்களுக்காகவும் உங்களிடம் கேட்கலாம்.

இக்கடமைகள் இவற்றை உள்ளடக்குகின்றன

:சூழ்நிலை காரணமாக ஒருவர் சந்தேகத்துக்குரியவர் போல் தென்பட்டாலோ, நடந்த தவறுக்கு சாட்சியமாய் இருக்கக்கூடியவராக இருந்தாலோ விசாரணை செய்யப்படும்.

## நான் அதிகாரியின் கேள்விக்குப் பதிலளிக்கவோ என்னை அடையாளப்படுத்தவோ வேண்டுமா?

பொதுவாக பொலிஸ். ஆதிகாரிக்கு உங்களை அடையாளப்படுத்தத் தேவையில்லை.. ஆனால் சில பின்வரும் விதிவிலக்குகள் இருக்கின்றன.

நீங்கள் வாகனம் செலுத்தும் வேளையில்

நீங்கள் ஏற்கெனவே பின்வரும் மாகாணரீதியிலான குற்றங்கள் இழைத்திருந்தால்

மதுபானக்குற்றம், அத்துமீறுதல், வாகனஓட்டுகையில் குற்றம்.

இந்த சந்தர்ப்பங்களில் அதிகாரியுடன் ஒத்துழைப்பதோடு, முடிந்தளவு கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் கொடுங்கள். .

நீங்கள் தவறு இழைத்ததாகவோ, சந்தேகப்படும் வகையில நடந்து கொள்வதாகவோ பொலிஸ் காவலர் நினைத்தால் நீங்கள் யார் என்று அறிய முற்படலாம்.

பொலிஸ் காவலருக்கு நீங்கள் யார் என்று சொல்லவேண்டியதிற்கு பலகாரணங்கள் உள்ளன.

நீங்கள் தவறு இழைத்ததாக காவலர் சந்தேகித்தால், நீங்கள் யார் என்று அறிய முற்படுவார்கள். இதற்கான காரணங்கள் பல இருக்கின்றன.

காவல்துறையினர் வேறுயாரையோ தேடுவதாக இருந்தால் நீங்கள் அவரில்லை என்று நிரூபிப்பதினால் கைதுசெய்யப்படுவதை தவிர்த்துக்கொள்ளலாம்

காவல்துறையினர் நீங்கள் குற்றம் இழைத்தவராக கருதினால், நீங்கள் யார் என்று சொல்லாவிட்டால் உங்களை கைதுசெய்து, நீங்கள் யார் என்று அறியும் வரை காவல் நிலையத்தில் வைத்திருக்க நேரிடலாம்.

நீங்கள் சிறியகுற்றம் இழைத்தவர் என்று கருதினால், நீங்கள் உங்களை அடையாளப்படுத்துமிடத்து, உங்களை கைது செய்யாமல், ரிக்கெற் தந்து, எப்போது நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று சொல்லி அனுப்பலாம்.

## சாலை போக்குவரவு சார்ந்த குற்றங்கள்

காவல் அதிகாரியால் நிறுத்தப்பட்டால் தெருவின் வலதுபக்கத்து மிக அருகாமையில் வாகனத்தை நிறுத்துங்கள்

காவலர் வெளியே இறங்கச் சொல்லாவிட்டால் உங்கள் வாகனத்துக்கு உள்ளேயே இருங்கள்.

அலுவலருக்கு பின்வரும் பத்திரங்களைக் கொடுப்பதற்கு தயாராக இருங்கள் :

செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம்

வாகன உரிமத்தில் வாகன மற்றும் எண்பலகைப் பகுதி.

காப்புறுதிக்கான ஆதாரம்.

குற்றச்சீட்டுத் தரப்பட்டால் அமைதியாக வாங்கவும். குற்றச்சீட்டுப் பெறுதல் என்பது தவற்றை ஒப்புக்கொள்ளல் அல்ல.

## நான் கைதானால் எனது உரிமைகள் என்ன?

நீங்கள் கைதானாலோ காவலரால் தடுத்துவைக்கப்பட்டாலோ கனடிய உரிமைச் சட்டம் உங்களைப் பாதுகாக்கின்றது

இவ்வுரிமைகள் இவை: :

ஏன் கைதுசெய்யப்பட்டீர்கள் என்ற காரணத்தை உடனே அறிவதற்கான உரிமை

தாமதமின்றி சட்ட ஆலோசகரை நியமித்து ஆலோசனை பெறும் உரிமையுண்டு. இது இலவச சட்ட ஆலோசனை இருப்பதையும் எப்படிப் பெறுவது என்பதையும் அறிதல். “தாமதமின்றி” என்பது சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் வந்து, அனைவரது பாதுகாப்பையும் உறுதிசெய்தபின்.

நீங்கள் 18 வயதுக்கு உட்பட்டவரென்றால் உங்களுக்கு முடிந்தளவு விரைவில் பெற்றோருடனோ, இன்னொரு தகுந்த வயதானவருடனோ கதைப்பதற்கு உரிமையுண்டு. இவ்வுரிமைகளைப் பற்றி காவலர் விளக்கவேண்டும்.

.

## காவலர் பற்றி முறைப்பாடு இருந்தால் என்ன செய்யலாம்?

நீங்கள் ரொறன்ரோ காவற்சேவையின் கொள்கை பற்றியோ, சேவை பற்றியோ அல்லது காவலர் நடத்தை பற்றியோ முறையிடலாம்.

சம்பவத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர் மட்டுமே முறைப்பாடு செய்யலாம்.

முறைப்பாடானது எழுத்து வடிவில் முறைப்பாடு செய்பவரால் கையொப்பமிடப்பட்டு இருக்க வேண்டும். முறைப்பாட்டை கடிதமாகவோ அல்லது காவல் நிலையத்தில் அல்லது தன்னிச்சையான காவலர் மதிப்பீட்டு இயக்குநர் அலுவலகத்தில் கிடைக்கும் பொதுவான படிவத்திலோ பதிவு செய்யலாம்.

OIPRD
655 Bay Street, 10th Floor
Toronto, Ontario
M5G 2K4

இலவச இணைப்பு 1-877-411-4773
உள் இணைப்பு 416-246-7071

www.oiprd.on.ca

முறைப்பாடு செய்வதற்கான முறைகளைத் தாங்கிய கைநூலைக் காவல்நிலையத்தில் அல்லது ரொறன்ரோ காவற்சேவை இணையத்தில் காணலாம் www.torontopolice.on.ca

முறைப்பாடானது வழமையாக சம்பவம் நிகழ்ந்த 6 மாதங்களுக்குள் வழங்கப்பட வேண்டும்.

.

## நான் பொலிஸ் காவலராவது எப்படி?

ரொறன்ரோ காவற்சேவை எமது நகரத்தின் பல்லின பண்பாட்டைப் பிரதிநிதிப்படுத்தும் மக்கள் காவலராக வரவேண்டுமென மிகவும் முயற்சிக்கின்றது.

காவலராக ஆவதற்கு நீங்கள் காவற்சேவைச் சட்டத்தில் உள்ள தகமைகளை நிறைவு செய்திருக்க வேண்டும். மற்ற தகமைகளாக

நீங்கள் கனடிய குடியுரிமை பெற்றவராகவோ நிரந்தர வதியும் உரிமை பெற்றவராகவோ இருக்கவேண்டும்

18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்

முழுமையாக நான்காண்டு உயர்பள்ளிப் படிப்போ அதற்கு நிகரான படிப்போ முடிந்திருக்கவேண்டும்

பண்பான குணங்களும் பழக்கவழங்கங்களும் உள்ளவராக இருக்கவேண்டும்.

மன்னிக்கப்படாத குற்றங்கள் இல்லாதவராக இருக்கவேண்டும்.

உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பதவிக்குரிய வேலைகளை ஆற்றக் கூடியவாறு இருக்கவேண்டும்

அத்தோடு உங்களுக்கு :

சாதாரணமாகவே 20- 40 பார்வையுடன் சாதாரண நிறங்களைப் பார்க்கும் தன்மையும்

திறமைக்குறைவுக்காக 6 புள்ளிகளுக்கு மேல் கொண்டிராத ஜீ பிரிவு சாரதி அனுமதிப்பத்திரம்

வழமையான முதலுதவி மற்றும் சி.பி.ஆர் தரம் ‘சி’

கூடுதல் விவரத்துக்கு 416-808- JOIN என்ற எண்ணூடாகத் தொடர்பு கொள்ளவும்

இந்த காணொளியில் உள்ள தகவல்கள் ரொறன்ரோ காவற்சேவையைப் பற்றி கூடுதலாக அறிய உதவியிருக்கும் என நம்புகின்றோம்.

எப்படி அவசரத் தேவையின் போது காவலரைத் தொடர்புகொள்வது, எப்படி அவசரமற்ற சமயங்களில் காவலரைத் தொடர்புகொள்வது, காவலர் மறித்தால் என்ன செய்வது என்பதை ஞாபகமூட்ட “ரொறன்ரோ காவற்சேவைக்கு ஒரு வழிகாட்டல்” என்ற கைநூலைத் தயவுசெய்து வைத்திருங்கள்.

எந்த மொழியிற் கதைத்தாலும் உங்களுக்கு உதவவே காவலர் உள்ளனர் என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள். அவசரத் தேவையின் போது 9-1-1 என்ற எண்ணை அழைத்து உதவியைப் பெறலாம்.